**காலி மாவட்டத்தின் 33 கமநலசேவை குழுக்களின் - 2022**

-----------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 காலி மாவட்டத்தின் 33 கமநலசேவை குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
2023 அக்தோபர் 12 திகதியளவில் 2022 ஆண்டு தொடர்பான காலி மாவட்டத்தின் 33 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 33 குழுக்களினதும் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் ஒன்று வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள்

### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அபிப்பிராயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கி கமநல அபிவிருத்திக் குழுவின் அலகு ஒன்றாக இருந்தமையால் 33 குழுக்களினதும் இணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 75/12க.அ.பொது இலக்கம் மற்றும் 2022 ஜனவரி 11 திகதிய கடித்தின் மூலம் வழங்கியிருந்த அறிவுரைகள் மற்றும் படிவத்தின் படி கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது என. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 04/2012 இலக்கம் மற்றும் 2012 பெப்ரவரி 29 திகதிய சுற்றறிக்கையின் 5.6(1) இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 14 கமநல சேவைக் குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றி அதனை கணக்குக் கொள்கைகளின் கீழ் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 17 கமநல சேவைக் குழுக்களினால் நடைமுறை ஆண்டின் போது கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் அகற்றப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு கணிக்கும் அடிப்படை கணக்கீட்டு நியமத்தின் கீழ் வெளிப்படுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 06 கமநல சேவைக் குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 86(ஆ) பந்தியின் பிரகாரம், நிதிக் கூற்றுக்களில் ஒவ்வொரு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பு தொடர்பாக பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு கழிக்கும் முறை கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | கொக்கல கமநல சேவைக் குழுவினால் கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் ஏக்கர் வரி அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது என குறிப்பிட்டிருந்த போதிலும், காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்பற்றக்கூடிய கணக்கீட்டுக் கொள்கைகள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 33 கமநல சேவை குழுக்கள் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் 14 கமநல சேவை குழுக்களில் 28 கணினிகள், 14 அச்சு இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகள், 02 கமநல சேவை குழுக்களில் 04 புல் வெட்டும் இயந்திரங்கள், ஒரு கமநல சேவை குழுவின் 02 கணினி மேசைகள் மற்றும் 02 கணினி கதிரைகள், 04 இரும்புக் கபட்கள், 02 உத்தியோகத்தர் கதிரைகள் ஆகிய நிலையான சொத்துக்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் அவற்றின் பெறுமதி வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் காட்ட வேண்டும். |
| (ஆ) | 09 கமநல சேவை குழுக்களின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள், கட்டிடங்கள், பயிர் குடில்கள், குழாய் நீர்ப்பொருத்துக்கள், விவசாயக் | இணங்குகின்றேன் என மற்றும் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துக்களை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கும் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு முடிவடைந்திருந்த பௌதீக ரீதியாக |

| | | | |
|---|---|---|---|
| | கிணறுகள் என்பன பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும் 03 குழுக்களின் அந்த சொத்துக்கள் ரூபா 1 என காட்டப்பட்டிருந்தது. 05 குழுக்களின் சொத்துக்கள் சூனியம் என காட்டப்பட்டிருந்ததுடன், கொக்கல கமநல சேவைக் குழுவின் சிபவ்ரா டிரக்டர் மற்றும் எல்பிடிய கமநல சேவைக் குழுவில் தற்காலிகக் கட்டிடங்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | | காணப்படுகின்ற சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல வருட காலம் முதல் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 03 குழுக்களின் தேயிலை பயிர்ச் செய்கைச் செலவு ரூபா 980,000 தொகையும், 02 குழுக்களின் கருவா பயிர் செய்கைச் செலவு ரூபா 181,339 தொகையும், ஓபாத கமநல சேவைக் குழுவின் தெங்கு மற்றும் அன்னாசி பயிர்ச் செய்கைக்காக முறையே ரூபா 25,000 தொகை மற்றும் ரூபா 30,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த சொத்துக்கள் இன விருத்திச் சொத்துக்கள் என கணக்குகளில் சீராக்கல் செய்திருக்காததுடன், தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 45,800 தொகை நிதிச் செயலாற்றுகை கூற்றில் ஆண்டிற்கான செலவொன்றென காட்டப்பட்டிருந்ததது. | இணங்குகின்றேன் என மற்றும் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் படி இன விருத்திச் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | காணிகளை துண்டுகளாக பகிர்வு செய்து விற்பனை செய்யும் கம்பனி ஒன்றினால் காணி ஒன்று துண்டுகளாக பகிர்ந்து விற்பனை செய்யும் போது கால்வாய் ஒன்றிற்கு ஏற்படக்கூடிய சேதங்களுக்காக காலி மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி உதவி ஆணையாளரின் பரிந்துரையின் மீது ரூபா 500,000 தொகை வலகந்துவ கமநல சேவைக் குழுவிற்கு செலுத்தப்பட்டிருந்தது. முன்வரும் ஆண்டுகளின் போது | இணங்குகின்றேன் என. | கால்வாயை பராமரிப்பதற்காக கிடைத்திருந்த பணத்தை வைப்புக் கணக்கொன்றில் கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| கால்வாயினை பராமரிப்பதற்காக பெற்றிருந்த இந்தத் தொகை மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றென நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | | |

### 1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 14 கமநல சேவை குழுக்களில் 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளிடையே மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,529,312 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு இணக்கமின்மைகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.2.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை 05 கமநல சேவை குழுக்களில் ரூபா 151,442 இற்கான தொங்கல் கணக்கு வரவு மீதி மற்றும் 03 கமநல சேவை குழுக்களில் காணப்பட்ட ரூபா 23,459 இற்கான தொங்கல் கணக்கு செலவு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தொங்கல் கணக்கு மீதிகள் விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |

### 1.2.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 14 கமநல சேவை குழுக்களின் ரூபா 11,594,226 இற்கான சொத்துக்கள் தொடர்பான விரிவான பதிவுகள் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், கடன் பதிவேடுகள், நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் மற்றும் உரிமை சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் காணப்படாததுடன், 20 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக ரூபா 8,648,121 தொகைக்கான பொறுப்புக்கள் தொடர்பான கடன் பதிவேடுகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், விரிவான பதிவுகள், ஏற்பட்டிருந்த முறை, பொறுப்புச் சொல்ல | இணங்குகின்றேன் என. | காணி உறுதிகள், நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், நட்டங்கள் சேதங்கள் பதிவேடு, பண்டக் கணிப்பீட்டு அறிக்கை, மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், அட்டவணைகள், ஏற்பட்டிருந்த முறை, பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்கள், ஏனைய உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

வேண்டிய நபர்கள், காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் காணப்படாமையால் அந்த கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாமல் இருந்தது.

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) பிரிவு 51(1) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் ஒவ்வொரு பிரதேசத்திலும் கமநல அபிவிருத்தி சபை ஒன்று நிறுவுவதற்காக செயற்பட வேண்டியிருந்த போதிலும் 32 கமநல சேவை குழுக்களினால் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 51(1) இன் கீழ் கமநல அபிவிருத்தி சபை ஒன்று நிறுவுவதற்காக இதுவரை கட்டளைகள் தயாரித்திருக்காமையால் கமநல அபிவிருத்தி சபை ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) பிரிவு 53(1) | 05 கமநல சேவைக் குழுக்களின் அதிகாரப் பிரதேசங்களில் விவசாயக் காணி தொடர்பான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு திருத்தங்களை மற்றும் சீர்திருத்தங்கள் மேற்கொண்டு ஆணையாளர் நாயத்தினால் சான்றுபடுத்தியிருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) பிரிவு 53(4)(அ) | அனைத்து 03 வருடங்களுக்கு ஒரு முறை குழுவின் அனைத்துப் பதிவேடுகளும் ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதனை செய்யப்பட்டு சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 11 கமநம சேவைக் குழுக்களினால் அவ்வாறு சான்றுபடுத்தியிருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | பிரிவு 56(1) | அனைத்து விவசாயக் காணிகளுக்காகவும் விதிக்கப்படுகின்ற ஏக்கர் வரி ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 திகதிக்கு முன்னர் அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 09 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 1,024,824 இற்கான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று காணப்பட்டது. | வரி செலுத்தாத விவசாயிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | பிரிவுகள் 56(3) மற்றும் 56(4) | 05 கமநல சேவைக் குழுக்களில் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறும் விவசாயிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரி செலுத்தாத விவசாயிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | கெரதேவல கமநல சேவைக் குழுவின் 2007 ஆண்டின் போது இரும்புப் பெட்டியுடன் களவாடப்பட்ட ரூபா 97,405 தொகை தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 104 | நியாகம கமநல சேவைக் குழுவில் 2022 மே 30 திகதி கள்வர்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த ரூபா 2,400 தொகைக்கான ERP 200 கிலோகிராம்கள் மற்றும் இலவசமாக கிடைத்திருந்த 450 கிலோகிராம் தொடர்பான யூரியா தொடர்பாக பிரமாண ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 110 | 07 கமநல சேவைக் குழுக்களினால் நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வேண்டும். |
| (iv) | நிதிப் பிரமாணம் 133 | 23 கமநல சேவைக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதுடன், 2022 ஆண்டிற்காக கமநல சேவை நிலையங்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 143(2)(ஊ) | 12 கமநல சேவைக் குழுக்களினால் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு விஷேட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரி செலுத்தாத விவசாயிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (vi) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 06 கமநல சேவைக் குழுக்களிளால் வழங்கப்பட்டிருந்த ஆனால் 06 மாதங்களை கடந்திருந்த ரூபா 27,272 தொகை பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (vii) | நிதிப் பிரமாணம் 757(2) மற்றும் (4) | 26 கமநல சேவைக் குழுக்களினால் பண்டக் கணிப்பீடு மேற்கொண்டு அவ் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 33 நிலையங்களில் பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன், தலைமை அலுவலகத்தின் அறிவுரையின் படி பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (viii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் இலக்கம் 08/2020 கொண்ட 2020 ஜூன் 25 திகதிய கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கை | 31 கமநல அபிவிருத்தி குழுக்களில் பிரதேச உத்தியோகத்தர்கள் மற்றும் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தரினால் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| (i) | 1986 ஒக்தோபர் 21 திகதிய இலக்கம் 264 கொண்ட சுற்றறிக்கை | குழுக் கட்டிடத்தின் அறைகள் வாடகைக்கு வழங்கியிருந்த பல்வேறு திணைக்களங்களில் இருந்து ஆண்டின் போது பெற வேண்டிய அறை வாடகை தொகைக்காக வருடம் முடிவடைந்து 06 மாதங்களுக்குள் முன்னைய ஆண்டின் திசெம்பர் மாதம் வரையான உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு வாடகைத் தொகையை அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 29 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,997,502 இற்கான நிலுவை அறை வாடகை மீதியொன்று காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (ii) | 1992 ஆகஸ்ட் 03 திகதிய 439/92 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை மற்றும் 1995 செப்தம்பர் 07 திகதிய 459/95 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | சேகரிக்கப்படும் ஏக்கர் வரி வருமானத்தின் 20 சதவீதம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், 26 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,989,130 தொகை அந்த நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (iii) | 2016 பெப்ரவரி 09 திகதிய 03/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | அஹங்கம கமநல சேவை அதிகார பிரதேசத்தினுள் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (iv) | 1988 மே 27 திகதிய இலக்கம் 322 | காணிகளின் உரிமை குத்தகைத் தொகை பெற்றுக் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | (7/10/4/3) கொண்ட சுற்றறிக்கை | கொண்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் குறிப்பிட்ட நபர்களுக்கு செலுத்துவதற்கு அல்லது ஒரு வருட காலத்தினுள் ஏற்றுக்கொள்ளாத பணம் கமநல சேவை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 16 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ரூபா 458,113 இற்கான உரிமைக் குத்தகை மீதியொன்று காணப்பட்டது. | | செயற்பட வேண்டும் |
| (v) | 7/12/4/5 இலக்கம் கொண்ட 2021 ஜுலை 15 திகதிய சுற்றறிக்கையின் பந்தி 4.1.5 | அனைத்து கமநல வங்கியினாலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய குறிப்பிட்ட ஆண்டில் விவசாயக் கடன் வழங்குதல் கட்டாயமாக இருந்த போதிலும் வலகந்துவ கமநல வங்கியினால் மீளாய்வாண்டின் போது விவசாய கடன் வழங்காமல் பங்கிலாபம் கணிக்கப்பட்டிருந்தது. | தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்கும் அறிவுரையின் படி குறிப்பிட்ட கொடுப்பனவு அலுவல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (vi) | 1981 ஒக்தோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 20(2) | ஓபாத கமநல சேவைக் குழுவின் செயலாளரினால் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை இருப்புப் பதிவேடு பரிசோதனை செய்து கையொப்பமிட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் எதிர் காலத்தில் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | **விவசாய அமைச்சுச் செயலாளர் சுற்றறிக்கை** | | | |
| | 2016 NFC/FCGvi இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 6.4 | மானிய உரத்தை கூடிய விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைத்திருந்த பணத்தினை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 03 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு உர விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 356,224 தொகையினை விவசாய அமைச்சுக்கு அனுப்பியிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) **திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை** | | | |
| 1978 திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | ஊரல கமநல சேவைக் குழுவினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணியிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2022 ஆண்டில் 33 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 5,667,027 இற்கான மிகையொன்றும், 33 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,111,893 இற்கான மிகையொன்றும் காணப்பட்டது. 2021 ஆண்டில் 33 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 5,458,132 இற்கான மிகையொன்றும், 33 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,772,542 இற்கான மிகையொன்றும் காணப்பட்டது.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 27 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 6,449,244 தொகைக்கான மிகையொன்று பெற்றிருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் 26 விவசாய சேவைக் குழுக்களின் மிகை ரூபா 6,075,787 தொகை காணப்பட்டது. அதன்படி, ரூபா 373,457 தொகை மிகையில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டில் 06 குழுக்களின் பற்றாக்குறை ரூபா 782,217 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் 07 குழுக்களின் பற்றாக்குறை ரூபா 617,655 தொகை காணப்பட்டது. அதன்படி, பற்றாக்குறையின் அதிகரிப்பு ரூபா 164,562 தொகை எனினும், மிகையின் அதிகரிப்கை சீராக்கல் மேற்கொள்ளப்பட்டமையால் ஒட்டுமொத்த மிகை ரூபா 208,895 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) கமநல சேவைக் குழுக்களின் அடிப்படை பணிப்பொறுப்பொன்றென உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகள், விவசாய உபகரணங்கள் உட்பட விவசாய பண்டங்களை விற்பனை செய்தல் ஆகக் காணப்படுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக 33 கமநல சேவைக் குழுக்களின் மொத்த விற்பனையின் கூட்டுத்தொகை ரூபா 24,391,912 தொகையாக காணப்பட்டது. முழு மொத்த இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,258,943 தொகையாக காணப்பட்டமையால் அதன்படி, ஒரு கமநல சேவைக் குழுவின் வருடாந்த சராசரி விற்பனைப் பெறுமதி ரூபா 739,148 தொகையாக காணப்பட்டதுடன், சராசரி மொத்த இலாபம் ரூபா 68,452 தொகையாக இருந்தது.

(இ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 33 கமநல சேவைக் குழுக்களின் நிதி நிலைமை தொடர்பாக தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| | | --------- |
| <u>மொத்தச் சொத்துக்கள்</u> | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | = | 126,926,523 |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | = | 41,671,365 |
| <u>மொத்தப் பொறுப்புக்கள்</u> | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 94,817,665 |
| நீண்ட கால கடன் பெறுமதி | = | 12,469,803 |
| திரண்ட நிதியப் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | 61,310,420 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊரகஸ்மன்ஹந்திய கமநல சேவைக் குழுவின் நடைமுறை கணக்குகள் இரண்டில் ரூபா 7,008 தொகையும், கோனதெனிய கமநல சேவைக் குழுவின் நடைமுறைக் கணக்கு ஒன்றில் ரூபா 300,000 இற்கு மிகையான தொகையொன்று ஆக்கபூர்வமான முதலீடொன்றில் ஈடுபடுத்தி வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | பணம் மிகவும் பயன்தரக்கூடிய முதலீடுகளில் ஈடுபடுத்தி வருமானங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவைக் குழுக்களின் இனங் காணப்பட்ட ரூபா 59,235 இற்கான தொகை பணம் பற்றாக்குறையாகவும் மற்றும் 04 கமநல சேவைக் குழுக்களில் இனங் காணப்பட்ட ரூபா 108,329 இற்கான இருப்புப் பற்றாக்குறைகள் அதற்குரிய பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 கமநல சேவை நிலையங்களுக்குரிய காணிகள் கமநல அபிவிருத்தித் | இணங்குகின்றேன் என. மற்றும் கமநல சேவை நிலையங்கள் அமைந்துள்ள காணி மற்றும் | நிலையத்திற்கு சொந்தமான காணிகளை |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திற்கு உரித்தாக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பிலான கமநல சேவை நிலையத்திற்கு சொந்தமான காணியை உரித்தாக்காமையால் காணியின் உரிமை அக்மீமன பிரதேச செயலாளருக்கு சொந்தமாக காணப்பட்டது. நன்கொடையாக கிடைத்திருந்த இந்தக் காணியின் ஒரு பகுதியின் உரித்து தொடர்பாக உரிமையாளரினால் நட்டஈடு கோரப்பட்டிருந்தது. | கட்டிடங்களை உரித்தாக்கி வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரித்தாக்கி தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | 33 கமநல சேவை குழுக்களுக்காக குழு நிதியத்திலிருந்து ரூபா 1,085,700 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த விரலடையாள பதிவு இயந்திரங்கள் 2020 பெப்பரவரி, மார்ச் மாதங்களில் பொருத்தப்பட்டிருந்தது. விரல் அடையாள பதிவு இயந்திரம் தொடர்பாக மென்பொருள் (App) கணினியில் காணப்படாமையால் 2023 ஆண்டளவிலும் விரல் அடையாள பதிவிற்குரிய சம்பவ பதிவு பெற்றுக்கொள்வதற்கு முடியாமையால் இயந்திரம் கொள்வனவு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இயந்திரம் பொருத்திய நாளில் இருந்து 02 மாதங்கள் முதல் இயந்திரங்கள் செயற்படாமை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட 07 குழுக்களின் இயந்திரங்களில் செயற்படாமல் இருந்த ஒரு இயந்திரம் திருத்தம் மேற்கொள்ள முடியாது என கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் 03 இயந்திரங்களுக்காக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | கொள்வனவு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோலை நிறைவேற்றிக்கொள்ளல் மற்றும் செயற்படாத இயந்திரங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நெலுவ கமநல சேவை குழுவின் விவசாய ஆய்வு உற்பத்தி உதவி 10 பிரிவுகளின் ஏக்கர் வரி கணிக்கப்பட்டிருக்காததுடன், யக்கலமுள்ள மற்றும் நாகொட 02 | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை ஏக்கர் வரியினை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கமநல சேவைக் குழுக்களின் 11 பிரிவுகளில் ரூபா 164,645 இற்கான ஏக்கர் வரித் தொகையில் பணம் ஏதும் அறவீடு செய்திருக்கவில்லை. நியாகம கமநல சேவைக் குழுவில் ரூபா 52,800 இற்கான ஏக்கர் வரித் தொகையில் ரூபா 80 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நெலுவ கமநல சேவைக் குழுவின் தபலகம பிரிவின் விவசாய ஆய்வு உத்தியோகத்தருக்கு 2019 மார்ச் 13 மற்றும் 2019 ஜூலை 31 திகதிகளில் வழங்கப்பட்டிருந்த இரண்டு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் திருப்ப ஒப்படைக்காமை தொடர்பாக விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | விசாரணையை பூர்த்தி செய்து அறிக்கையை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல வருட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் 32 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 12,897,612 தொகைக்கான 339 பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்தவற்கும் 33 கமநல சேவைக் குழுக்களின ரூபா 18,621,999 தொகைக்கான 429 செலுத்த வேண்டிய மீதிகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் 2023 ஆண்டில் மீதிகளை தீர்த்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நீண்ட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களில் நெற்பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தக்கூடிய A தரத்தை சேர்ந்த தரிசு வயல்களின் எண்ணிக்கை சுமார் 129 ஏக்கர்கள் ஆக காணப்பட்டதுடன், நெற் பயிர்ச்செய்கை அல்லாத ஏனைய குறுகிய கால பயிர்களை பயிர் செய்கையில் ஈடுபடுத்தக்கூடிய B தரத்தை சேர்ந்த தரிசு வயல்கள் எண்ணிக்கை 615 ஏக்கர்களாக காணப்பட்டன. இந்த வயல்களை மீளாய்வாண்டின் போது நெற்பயிர்ச் | பதிலளித்திருக்கவில்லை. | தரிசு வயல்களை நெற் பயிர் செய்கைக்கு அல்லது ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்கைக்கு அல்லது ஏனைய பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 நிதியம் குறைபயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 கமநல சேவைக் குழுக்களின் பதிவு செய்யப்பட்ட 262 விவசாய அமைப்புக்களின் சேமிப்பு கணக்கு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 31,433,951 இற்கான தொகை விவசாய அமைப்புக்களின் குறிக்கோள்களுக்காக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | கமநல சேவை நிலையங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த விவசாய அமைப்புக்களின் சேமிப்புத் தொகை அந்த விவசாய அமைப்புக்களின் குறிக்கோள்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

**3.6 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவைக் குழுக்களின் விவசாய விற்பனை நிலையங்கள், கெரதேவல கமநல சேவை நிலையத்தின் பழைய உர களஞ்சியம் அகங்கம கமநல சேவைக் குழுவின் 03 டிரக்டர் டேலர்கள், 04 சில்லு டிரக்டர் இயந்திரமொன்று மற்றும் வேரகொட கமநல சேவைக் குழுவின் நிழல் பிரதி இயந்திரமொன்று பல வருட காலம் முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | விவசாய விற்பனை நிலையங்கள் உர களஞ்சிய கட்டிடங்கள் விரைவாக ஆக்கபூர்வமான விடயத்திற்கு ஈடுபடுத்துவதற்கும், டிரக்டர்கள் மற்றும் டிரேலர்களை அப்புறப்படுத்துவதற்கும் நிழல்பிரதி இயந்திரத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 கமநல சேவைக் குழுக்களில் உத்தியோகத்தர்கள் வெளிச் செல்லும் சந்தர்ப்பங்களில் வெளிச் செல்லல் பதிவேட்டில் குறிப்பிட்டு பதவி நிலை உத்தியோகத்தர்களின் | இணங்குகின்றேன் என மற்றும் எதிரிகாலத்தில் உரிய நடவடிக்கை எடுப்படுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உத்தியோகத்தர்கள் வெளிச் செல்லும் சந்தர்ப்பத்தில் எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன், பேணிச் செல்லப்பட்டிருந்த அந்த பதிவேட்டில் பதவியணி உத்தியோகத்தர் ஒருவரினால் அங்கீகரித்திருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | அஹங்கம கமநல சேவைக் குழுவினால் விடுமுறைப் பதிவேட்டில் வெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகளை உட்படுத்தி உரிய முறையில் நாளதுவரை ஆக்கியிருக்காததுடன், அரை நாள் விடுமுறை மற்றும் தாமதமாக வருதல் அவற்றிற்குரிய பதிவேடுகள் பேணியிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என மற்றும் எதிரிகாலத்தில் உரிய நடவடிக்கை எடுப்படுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விடுமுறை பெற்றுக்கொள்ளல், தாமதமாக வருதல் தொடர்பான பதிவேடுகள் முறைப்பிரகாரம் பேணிச் செல்லல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.2 இன் படி ஏதேனும் ஆண்டிற்குரிய நிதிக் கூற்று குறிப்பிட்ட நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 33 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 01 மாதமும் 12 நாட்கள் முதல் 05 மாதங்களும் 22 நாட்கள் வரையான காலவீச்சின் தாமதத்தின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளித்திருக்கவில்லை. | 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.2 இன் படி ஏதேனும் ஆண்டிற்குரிய நிதிக் கூற்று குறிப்பிட்ட நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 19 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல், அங்கீகரித்தல், சமர்ப்பித்தலுக்காக பொறுப்பானர்கள் எவர் என்பது தொடர்பாக தனி நிறுவனம் ஒன்றின் (அரச திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் அல்லது அதற்கு சமமானவைகள்) நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நிறுவனத்தின் பிரதான நபர் (தலைவர், பிரதான நிறைவேற்று அல்லது ஆளுகை சபை, முகாமைத்துவ சபை) | பதிலளித்திருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 19 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் அதற்குரிய குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது அதற்கு சமமான ஒருவருக்கு பொறுப்புச் சாட்டப்படுகின்றது. அதன்படி, 33 கமநல சேவை குழுக்களுக்குரிய வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகள் குழுவினால் அங்கீகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் குழுவினால் அங்கீகரித்திருக்கவில்லை. | | |
| (இ) | 33 கமநல சேவைக் குழுக்களினாலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 21 இன் பிரகாரம், தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த படிவத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 21 இன் பிரகாரம் தேறிய சொத்துக்கள், உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 53 இன் பிரகாரம் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் மூலம் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வித்தியாசமான முறையில் தேவைப்படின் அல்லது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலன்றி நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் அனைத்து ஒப்பீட்டு ரீதியான தகவல்களுக்காக கடந்த காலப் பகுதியில் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் 33 கமநல வங்கிகளின் நிதிச் செயலாற்றுகை கூற்று, நிதி நிலைமை கூற்று மற்றும் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றுக்களில் முன்னைய ஆண்டின் தகவல்கள் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த படிவத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 53 இன் பிரகாரம் கமநல வங்கிகளினால் கடந்த காலப் பகுதிக்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 5 கமநல வங்கிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கி ஒன்றினால் கடன்பெறுவோர் ஒருவருக்கு வழங்கப்படும் விவசாய கடன் தொகை ஒன்று தீர்க்கும் உச்சமட்ட காலம் 06 மாதங்கள் என 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் பந்தி 3.4.2 இன் பிரகாரம் சுட்டிக் காட்டியிருந்த போதிலும் 23 கமநல வங்கிகளினால் 2000 ஆண்டு முதல் முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதி வரை வழங்கப்பட்டிருந்த விவசாய கடன்தொகையில் 920 கடன்பெற்றோர்களிடம் ரூபா 11,680,224 இற்கான கடன்தொகை ஒன்று 12 மாதங்கள் முதல் 22 வருடங்கள் வரையான காலம் நிலுவையாக காணப்பட்டது. | குறிப்பிட்ட நிலுவை அறவீடு செய்யும் அலுவல்கள் நியாயமன்று மற்றும் நீதிமன்றத்தின் மூலம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தவணைப் பணம் மற்றும் வட்டித் தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 04/2012 இலக்கங் கொண்ட கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் 3.8.4 பந்தியின் பிரகாரம் ரூபா 50,000 இற்கான செயற்திட்டக் கடன்தொகை உச்சமட்டம் 24 மாத காலவரையுள் செலுத்தி முடிக்க வேண்டுமென அறிவித்திருந்த போதிலும் 29 கமநல வங்கிகளினால் 2003 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியுள் வழங்கியிருந்த மொத்த செயற்திட்ட கடன்தொகையில் 1513 கடன்பெறுவோரிடம் ரூபா 30,146,949 தொகை கொடுப்பனவுக் காலம் 24 மாதங்களை மிகைத்திருந்தது. | குறிப்பிட்ட நிலுவை அறவீடு செய்யும் அலுவல்கள் நியாயமன்று மற்றும் நீதிமன்றத்தின் மூலம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தவணைப் பணம் மற்றும் வட்டி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 13 கமநல வங்கிகளினால் 2016 முதல் 2022 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 100,000 இற்கான கடன்தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 168 கடன்பெறுவோரிடம் ரூபா 10,070,116 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | குறிப்பிட்ட நிலுவை அறவீடு செய்யும் அலுவல்கள் நியாயமன்று மற்றும் நீதிமன்றத்தின் மூலம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தவணைப் பணம் மற்றும் வட்டி அறவீடு செய்யப்பட வேண்டும். |